மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 30/2024**

**வா.சா. 1**

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 18ம் நாள், வாதி தரப்பு (வ.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.மூ.ராமநாதன்,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | பாண்டியம்மள் | Caste | |
| Father / Husband's Name | வைரமுத்து | Calling | |
| Village | | Religion | |

தேதி: 18.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் இன்று இந்நீதிமன்றத்தில் எனது சாட்சிய முதல் விசாரணையாக சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான் அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் பிராதில் கோரியுள்ளவாறு தீர்பாகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | 22.02.2016 | 1, 2 பிரதிவாதிகள் வகையறா எழுதிக் கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரத்தின்(ஆவண எண்.286/2016) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 2 | 30.11.2020 | வாதிகளுக்கு 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் (ஆவண எண்.1608/2020) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 3 | 03.02.2021 | வத்திராயிருப்பு வருவாய் வட்டாட்சியர் அவர்கள் பட்டா மாறுதல் செய்து வழங்கிய செயல்முறை ஆணைகளின் அசல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| 4 | 15.07.2021 | பிராது 2 வது தபசில் சொத்திற்கான நத்தம் நிலவரித்திட்ட துூய அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 5 | | பிராது 2 வது தபசில் சொத்திற்கான மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 6 | 09.11.2021 | பிராது 2 வது தபசில் சொத்திற்கான மின் கட்டண இரசீதின் அசல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 7 | 23.08.2021 | வாதிகளால் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக இரசீதின் அலுவலுக நகல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 8 | 27.08.2021 | திருப்பூர் முகவரியிலிருந்து 1ம் பிரதிவாதியால் திருப்பப்பட்ட அஞ்சல் உறையின் அசல் **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 9 | 20.09.2021 | மகாராஜபுரம் முகவரியிலிருந்து 1ம் பிரதிவாதியால் திருப்பப்பட்ட அஞ்சல் உறையின் அசல் **வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/-எம்.இராமநாதன்/-
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு